# கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்ட அறிமுக விழா மற்றும் புதிய சிகப்பி நெல் குறித்த விரிவாக்க கலந்துரையாடல்




அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புல மாணவர்களின் கிராமத்தில் தங்கி வேளாண் பயிற்சி பெறும் திட்ட அறிமுக விழா கிள்ளையில் உள்ள டாடா சமுதாய கூடத்தில் 31.08.2013 அன்று நடைபெற்றது. இவ்விழாவிற்கு வேளாண் புல முதல்வர் முனைவர் இராம. கதிரேசன் தலைமை தாங்கினார். அவர் தனது தலைமையுரையில் அண்ணாமலைப் பல்கலைக்கழக வேளாண் புலம் மேற்கொண்டு வரும் புதிய வேளாண் ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க முயற்சிகள் குறித்து விவசாயிகளுக்கு விளக்கி கூறினார். தற்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகம் பிற்படுத்தப்பட்ட பகுதி மக்களுக்காக உருவாக்கி செயல்படுத்திவரும் ஒருங்கிணைந்த பண்ணை விவசாய முறைகளை பின்பற்றுவதன் வாயிலாக சிறு மற்றும் குறு விவசாயிகள், பண்ணை மகளிர் பொருளாதார மேம்பாடு அடைவதுடன் கிராமப்புற வளர்ச்சியும் ஏற்பட பெரிதும் வாய்ப்புள்ளது என்றார். இயற்கை வேளாண் தொழில்நுட்பமாக நெல், மீன் மற்றும் கோழி உள்ளிட்ட ஒருங்கிணைந்த பண்ணை சாகுபடி முறைகள் அறிமுகம் செய்யப்பட்டு விவசாயிகளிடம் நல்ல வரவேற்பு பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் தொடர்ச்சியான இயற்கை சீற்றங்களை சந்தித்து வரும் காவிரி பாசன பகுதி விவசாயிகளின் நலன்களை பாதுகாக்க வேளாண் புலத்தின் உழவியல் துறை சர்வதேச நெல் ஆராய்ச்சி நிறுவனத்துடன் இணைந்து புதியதாக “சிகப்பி” என்ற புதிய ரக நெல் விதையை அறிமுகம் செய்து வெற்றிகரமாக சாகுபடி செய்து வருவதாகவும் தெரிவித்தார். இவ்விழாவில் இறுதி ஆண்டு வேளாண் மாணவர்கள் உருவாக்கிய செம்மை நெல் சாகுபடி மற்றும் ஒருங்கிணைந்த பண்ணை விவசாயம் பற்றிய விரிவாக்க சுவரொட்டியையும் வெளியிட்டார். இவ்விழாவில் வேளாண் விரிவாக்கத்துறை உதவிப் பேராசிரியர் முனைவர் தி. ராஜ்பிரவின், காளிராஜன், கவாஸ்கர் மற்றும் சு.ஜெய்வேலு கலந்து கொண்டு கிராமத்தில் தங்கி பயிற்சி பெறும் திட்ட நோக்கங்கள், நடைமுறைகளை விளக்கிக் கூறினர்.

### புதிய சிகப்பி நெல் ரகம் குறித்த கலந்துரையாடல்

சிகப்பி நெல் குறித்த சாகுபடி கலந்துரையாடலில் முனைவர். இராம. கதிரேசன் மற்றும் தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் விஞ்ஞானிகள் முனைவர் ரமேஷ் குமார் மற்றும் அறிவுக்கரசு ஆகியோர் விவசாயிகளுக்கு சிகப்பி நெல் சாகுபடி குறித்த சந்தேகங்கள் மற்றும் பிற வேளாண் பிரச்சனைகளுக்கு தீர்வுகள் மற்றும் ஆலோசனைகளை வழங்கினார். மேலும் சி.மானம்பாடி மற்றும் சிங்காரகுப்பத்தில் சமுதாய நாற்றங்கால் அமைக்க முன்னோடி விவசாயிகள் திரு. ஏ. கிருஷ்ண மூர்த்தி மற்றும் திரு. மாயவன் ஆகியோருக்கு தேசிய வேளாண் புதுமை திட்டத்தின் கீழ் 200 கிலோ சிகப்பி விதை நெல் வழங்கப்பட்டது. இச்சமுதாய நாற்றங்கால் வாயிலாக கிராம மக்கள் அதிகளவு சிகப்பி நெல் சாகுபடியில் ஈடுபட முடிவதுடன், விவசாயிகளிடையே இப்புதிய நெல் ரகம் குறித்த விழிப்புணர்வு மற்றும் விரிவாக்கப் பணிகள் ஏற்படுத்தும் நோக்கில் இப்புதிய உழவியல் விரிவாக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கலந்துரையாடலில் கான்சாகிப் வாய்க்கால் பாசன சங்க தலைவர் வி. சகாப், தமிழ்நாடு விவசாய சங்க பிரதிநிதிகள் ராஜாராம், கற்பனைச் செல்வம், கண்ணன், கிளாடியோலஸ் சாகுபடியாளர் சங்க பிரதிநிதிகள் சீனிவாசப் பெருமாள், கணேசன் ஆகியோர் கலந்துகொண்டு தங்கள் கருத்துக்கள் மற்றும் வாழ்த்துக்களை வழங்கினர். இவ்விழாவில் கிள்ளை பகுதியைச் சேர்ந்த சுமார் 200 சிறு மற்றும் குறு விவசாயிகள், பண்ணை மகளிர், சுய உதவிக்குழு உறுப்பினர்கள், விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் கிராம மக்கள் பலர் திரளாக கலந்து கொண்டனர். இறுதியாக மாணவ பிரதிநிதி மு. ரத்தினகுமார் நன்றி தெரிவித்தார்.